



**அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமிரக பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை**

| | |
|---|---|
| வெளியீடு | ஐக்கிய அரபு அமிரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ஷஃபான் பிறை 20 ஹிஜ்ரி 1437

Friday of Sha'ban 20th Hijri 1437

27th May 2016

| | |
|---|---|
| **தலைப்பு:** | **ஜகாத்!** |



| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுல் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971 52 9919346 & Email : abusalih100@gmail.com<br>www.sunnathwaljamath.com |



*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | ஜகாத்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் ஜகாத்தை கடமையாக்கி அதன் மூலம் செல்வத்தில் வளர்ச்சியையும், செல்வம் பெருகுவதையும் ஏற்படுத்தி வைத்துள்ளான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(64:16)

فَاتَّقُوا اللَّهَ مَا اسْتَطَعْتُمْ وَاسْمَعُوا وَأَطِيعُوا وَأَنْفِقُوا خَيْرًا لِأَنْفُسِكُمْ وَمَنْ يُوقَ شُحَّ نَفْسِهِ فَأُولَئِكَ هُمُ الْمُفْلِحُونَ

"ஆதலால், உங்களால் சாத்தியமான வரையில் அல்லாஹ்வுக்குப் பயந்து, அவனுக்குச் செவிசாய்த்து வழிப்பட்டு நடந்து, தானமும் செய்யுங்கள். இது உங்களுக்குத்தான் மிக நன்று. எவர்கள் கஞ்சத்தனத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார்களோ அத்தகையவர்கள் நிச்சயமாக வெற்றியடைந்து விடுவார்கள்"

**முஸ்லிம்களே**! அல்லாஹ் தஆலா முஸ்லிம்கள் மீது ஜகாத்தை கடமையாக்கியுள்ளான். அதனை கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டிய மார்க்க கடமைகளில் ஒரு கடமையாக ஆக்கி வைத்துள்ளான். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (2:110)

وَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ

"அன்றி, நீங்கள் தொழுகையைக் கடைப்பிடித்தும், "ஜகாத்" (மார்க்கவரி) கொடுத்தும் வாருங்கள்"

மேலும் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

بُنِيَ الإِسْلاَمُ عَلَى خَمْسٍ: شَهَادَةِ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ، وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، وَإِقَامِ الصَّلاَةِ، وَإِيتَاءِ الزَّكَاةِ، وَحَجِّ الْبَيْتِ، وَصَوْمِ رَمَضَانَ

"இஸ்லாம் ஐந்து (தூண்கள்)மீது நிறுவப்பட்டுள்ளது. (அவை:) 1. அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மத் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதரும் ஆவார்கள் என்றும் உறுதிமொழி அளிப்பது, 2. தொழுகையைக் கடைப்பிடிப்பது, 3. ஜகாத் வழங்குவது 4. இறையில்லம் கஅபாவில் ஹஜ் செய்வது, 5. ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பது"

**ஜகாத் என்றால் என்ன?** அகராதி பொருள் விளக்கப்படி ஜகாத் என்றால் அதிகமாகுதல் மற்றும் வளர்ச்சியாகும். ஆம் ஜகாத் மூலம் செல்வம் அதிகரிக்கும் மேலும் பல விசாலாமான நற்பாக்கியங்கள் கிடைக்கும். ஜகாத் கொடுப்பதால் அந்த செல்வம் பன்மடங்காக பெருகும், சமச்சீராக வளர்ந்து கொண்டே போகும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்: (30:39.)

وَمَا آتَيْتُمْ مِنْ زَكَاةٍ تُرِيدُونَ وَجْهَ اللَّهِ فَأُولَئِكَ هُمُ الْمُضْعِفُونَ

"அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி ஜகாத்தாக ஏதும் நீங்கள் கொடுத்தாலோ, கொடுத்தவர்கள் அதனை இரட்டிப்பாக்கிக் கொள்கின்றனர்"

அதாவது, அவர்களிடமிருந்து இதனை அல்லாஹ் ஏற்றுக் கொள்கிறான். அவர்களுக்காக இந்த செல்வத்தை மென்மேலும் பன்மடங்காக பெருக்கித்தருகிறான். ((106 /20) : تفسير الطبري)

**ஷரீஅத் பார்வையில் ஜகாத்** என்றால் ஒரு செல்வந்தர் தன்னிடம் உள்ள செல்வங்களில் குறிப்பிட்ட அளவு பொருளை எடுத்து சில முக்கிய விதிகளை பேணி ஏழை எளியவர்களுக்கு வழங்கவேண்டிய பொருளியல் வணக்கமாகும். (حاشية الصاوي على الشرح الصغير : بلغة السالك لأقرب المسالك (581/1) بتصرف)

ஒரு கவிஞர் இவ்விதம் கூறுகிறார்:

وَاللَّهُ أَنْزَلَ فِي الْكِتَابِ فَرِيضَةً لِابْنِ السَّبِيلِ وَلِلْفَقِيرِ الْعَائِلِ

"வழிப்போக்கர்கள், ஏழை எளியவர்களுக்காக அல்லாஹ் தன்னுடைய வேதத்தில் ஒரு கட்டாயக் கடமையை விதியாக்கியுள்ளான்" (هو جرير)

**எந்தெந்த பொருட்களிலிருந்து ஒரு முஸ்லிம் ஜகாத் கொடுப்பது கடமையாகும்?** தங்கம், வெள்ளி, இவற்றிற்கு ஈடான காகித செலவாணி, ஆடு, மாடு, ஒட்டகம், விவசாய பொருள், வியாபார பொருள் போன்றவற்றிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு ஜகாத் கொடுக்க வேண்டும். (ابن عبد البر المالكي : الكافي في فقه أهل المدينة: (284/1) بتصرف)



www.sunnathwaljamath.com

**ஜகாத் கொடுப்பதின் அளவு என்ன?** ஷரீஅத் அடிப்படையில் ஒரு பொருள் குறிப்பிட்ட ஓர் அளவை அடைந்துவிட்டால் அதாவது சுமார் பன்னிரண்டாயிரத்து ஐநூறு திர்ஹம் அளவை அடைந்து, (அதாவது 85 கிராம் தங்கத்திற்கு ஈடான பணம் கையிலிருந்து) ஒரு வருடத்தை கடந்திருந்தால் ஒரு முஸ்லிம் இதிலிருந்து 2.5% அளவு ஜகாத் கொடுக்க வேண்டும். நபிகள் நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنِ اسْتَفَادَ مَالاً فَلاَ زَكَاةَ عَلَيْهِ، حَتَّى يَحُولَ عَلَيْهِ الْحَوْلُ

"ஒருவர் ஒரு பொருளை சொந்தமாக உடமையாக்கி கொள்கிறார், அந்த பொருள் மீது ஒரு வருடம் கடக்காதவரை அவர் மீது எந்த ஜகாத்தும் கடமையாகவில்லை" (الترمذي : 631)

வியாபார பொருள் அதாவது சரக்கின் மீதும் அதன் சந்தைவிலைப்படி ஜகாத் கொடுக்க வேண்டும். அதன் மூலம் கிடைத்த இலாபம் குறிப்பிட்ட அளவை அடைந்திருந்தால் அதன்மீதும் ஜகாத் கொடுப்பது கடமையாகும்.

கால்நடைகளில் பின்வருமாறு ஜகாத் கொடுக்க வேண்டும். ஐந்து ஒட்டகம் வைத்திருந்தால் ஒரு ஆட்டை ஜகாத்தாக கொடுக்க வேண்டும், முப்பது பசுமாடு வைத்திருந்தால் ஒரு மாட்டை ஜகாத்தாக கொடுக்க வேண்டும், நாற்பதிலிருந்து நூற்றி இருபது ஆடு வரை வைத்திருந்தால் ஒரே ஓர் ஆட்டை ஜகாத்தாக கொடுக்க வேண்டும். ஆனால் விவசாய பொருள் மீது அதன் அறுவடை நாளிலேயே ஜகாத் கடமையாகிவிடுகிறது. எல்லாம் வல்ல அல்லாஹ் இதனைப் பற்றி கூறுகிறான்: (6:141)

وَآتُوا حَقَّهُ يَوْمَ حَصَادِهِ

"அவற்றை அறுவடை செய்யும்போது (இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்காக) அதில் அவனுடைய பாகத்தையும் கொடுத்துவிடுங்கள்"

மேற்குறிப்பிட்டவைகளை அப்படியே கொடுக்கலாம் அல்லது அதற்கு ஈடான பணத்தையும் கொடுக்கலாம். வீட்டுப் பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்வதற்காக வைத்திருக்கும் நகைகள் மீது ஜகாத் கடமையாகவில்லை. ஆனால் இங்கு பல சட்ட நுணுக்கங்களை தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது. எனவே ஆர்வமுள்ளவர்கள் உலமாக்களிடம் இதற்குரிய தெளிவை பெற்றுக் கொள்ள வேண்டும்.

**முஃமீன்களே! ஜகாத் பொருளை பெறுவதற்கான தகுதியுள்ளவர்கள் யாரெல்லாம் என்பது உங்களுக்கு தெரியுமா?** இதனைப் பற்றி அல்லாஹ் மிக தெளிவாக கூறுகிறான்: (9:60)

إِنَّمَا الصَّدَقَاتُ لِلْفُقَرَاءِ وَالْمَسَاكِينِ وَالْعَامِلِينَ عَلَيْهَا وَالْمُؤَلَّفَةِ قُلُوبُهُمْ وَفِي الرِّقَابِ وَالْغَارِمِينَ وَفِي سَبِيلِ اللَّهِ وَابْنِ السَّبِيلِ فَرِيضَةً مِنَ اللَّهِ وَاللَّهُ عَلِيمٌ حَكِيمٌ

"தானமெல்லாம் வறியவர்களுக்கும், ஏழைகளுக்கும், தானத்தை வசூலிப்பவர்களுக்கும், புதிதாக இஸ்லாமைத் தழுவியவர்களுக்கும், அடிமைகளை விடுதலை செய்வதற்கும், கடனில் மூழ்கியவர்களுக்கும், அல்லாஹ்வுடைய பாதையில் போர் செய்வதற்கும்,

வழிப்போக்கர்களுக்கும் (உரித்தானதாக) அல்லாஹ் ஏற்படுத்தியதாகும். அல்லாஹ் (அனைத்தையும்) மிக அறிந்தவனும், ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்"

பக்கீர் (الْفَقِيرُ) எனும் ஏழை என்றால் அவரிடம் எந்த பொருளும் இருக்காது, வருமானமும் இருக்காது. மிஸ்கீன் (الْمِسْكِينُ) எனும் எளியவர் என்றால் அவரிடம் இருக்கும் பொருளும், அவருக்கு கிடைக்கும் வருவாயும் போதிய அளவில் இருக்காது. கடனில் மூழ்கியவர் (الْغَارِمُ) என்றால் அதிக கடன் சுமையில் இருப்பவர், இந்த கடனை அடைப்பதற்கான போதிய பொருளியியல் ஆதாரம் எதுவும் இல்லாதவர்.

வழிப்போக்கர் (ابْنُ السَّبِيلِ) என்றால் பயணத்தில் சென்று கொண்டிருக்கும்போது பொருட்கள் அனைத்தையும் தவற விட்டவர் அல்லது பரிகொடுத்தவர், மேற்கொண்டு பயணம் செய்து தனது சொந்த ஊருக்கு திரும்புவதற்கான எந்த வசதி வாய்ப்பும் இல்லாதவர். இவர்களுக்கெல்லாம் ஜகாத் கொடுக்க வேண்டும்.

ஆனால் யாருக்கெல்லாம் அன்றாட செலவுகளுக்கு கொடுப்பது கட்டாய கடமையோ அவர்களுக்கு ஜகாத் கொடுக்க கூடாது. அதாவது பெற்றோர்கள், பிள்ளைகள், மனைவி போன்றோர்களுக்கு ஒருவன் செலவு செய்வது கட்டாய கடமையாகும், எனவே இவர்களுக்கு தனது ஜகாத் பொருளை கொடுக்க கூடாது. ஆனால் ஒரு மனைவியிடம் ஜகாத் கொடுக்கும் அளவிற்கு வசதி இருந்து, அவளுடைய கணவன் ஜகாத் பெறும் தகுதியில் இருந்தால் அப்போது மனைவியிடமிருந்து கணவன் ஜகாத்தை பெற்றுக் கொள்ளலாம்.

**ஜகாத்தை எங்கு வைத்து நிறைவேற்ற வேண்டும்?** இதற்கு மார்க்க அறிஞர்கள் விளக்கம் தருகிறார்கள்: எந்த ஊரில் செல்வம் இருக்கிறதோ அங்கேயே கொடுக்க வேண்டும். இதற்கு ஆதாரமாக பின்வரும் செய்தியை குறிப்பிடுகிறார்கள். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஆத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை யமனுக்கு (ஆளுநராக) அனுப்பினார்கள். அப்போது அவரிடம்,

فَأَعْلِمْهُمْ أَنَّ اللَّهَ افْتَرَضَ عَلَيْهِمْ صَدَقَةً فِي أَمْوَالِهِمْ، تُؤْخَذُ مِنْ أَغْنِيَائِهِمْ وَتُرَدُّ عَلَى فُقَرَائِهِمْ

"...இதற்கும் அவர்கள் கட்டுப்பட்டால் அவர்களில் செல்வந்தர்களிடம் பெற்று, ஏழைகளுக்கு வழங்குவதாக அவர்களின் செல்வத்தில் இறைவன் ஜகாத்தைக் கடமையாக்கியிருக்கிறான் என்பதை அறிவிப்பீராக!" என்று கூறி அனுப்பி வைத்தார்கள்.(البخاري : 1395 )

ஆனால் செல்வம் இருக்கும் பகுதி மிகவும் செழிப்படைந்த பகுதியாக இருந்து அனைவரும் போதிய வசதி வாய்ப்பை பெற்றிருந்தால் அப்போது அந்த ஜகாத்தை வேறு ஒரு பகுதிக்கு எடுத்துச் செல்லலாம். இதற்கான போதிய நெறிமுறைகளை நமது ஐக்கிய அரபு அமீரக அரசு காட்டுகிறது. ஜகாத்தை மிக சரியாக நிறைவேற்ற வேண்டும் மேலும் ஷரீஅத் சட்ட நுணுக்கங்களை மிகச் சரியாக பேண வேண்டும் என்கிற நோக்கில் நமது அரசு ஜகாத் பொருட்களை பெறுவதற்கென சில பெட்டகங்களை ஏற்படுத்தி வைத்துள்ளது. இறை வேத கட்டளைகளையும், நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உத்தரவுகளையும் மிக துல்லியமாக நிறைவேற்றுவதற்காகவும், காலத்தின்



www.sunnathwaljamath.com

சூழலையும் கணக்கில் கொண்டு இந்த ஜகாத் உதவி அமைப்புகளை நம்முடைய அரசு திறம்பட இயக்கி வருகிறது. ஜகாத்தை அதன் உரிய காலத்தில் உரிய அளவில் கணக்கிட்டு கொடுப்பவர் நிச்சயம் பாராட்டுதலுக்குரியவர்.

**அல்லாஹ்வின் அடியார்களே! ஒருவன் தன்னுடைய செல்வதிலிருந்து அதற்குரிய ஜகாத்தை வழங்கிவிட்டால் அதனால் அவனுக்கு கிடைக்கும் பலன் என்ன?** அல்லாஹ் தஆலா கூறுகிறான்: (23:1-4)

قَدْ أَفْلَحَ الْمُؤْمِنُونَ* الَّذِينَ هُمْ فِي صَلاَتِهِمْ خَاشِعُونَ* وَالَّذِينَ هُمْ عَنِ اللَّغْوِ مُعْرِضُونَ* وَالَّذِينَ هُمْ لِلزَّكَاةِ فَاعِلُونَ

"நம்பிக்கையாளர்கள் நிச்சயமாக வெற்றி அடைந்துவிட்டனர். அவர்கள் எத்தகையவரென்றால் மிக்க உள்ளச்சத்தோடு தொழுவார்கள். அவர்கள் வீணான காரியங்களிலிருந்து விலகியிருப்பார்கள். அவர்கள் ஜகாத்தும் கொடுத்து வருவார்கள்"

அதாவது யார் மீதெல்லாம் ஜகாத் கடமையாகியுள்ளதோ அவர் அந்த ஜகாத்தை சரிவர நிறைவேற்றுவதோடு வெற்றியும் பெறுகிறார். ((10 /19) : تفسير الطبري)

ஒரு முஸ்லிம் தன்னுடைய செல்வத்திலிருந்து ஜகாத் கொடுப்பதன் மூலம் அவர் தன்னுடைய இறைவனின் கட்டளைகளுக்கு கீழ்படிந்தவனாக இருக்கிறார். அவனுடைய அன்பை பெறுகிறார், அவனுடைய கிருபையையும், மன்னிப்பையும், அங்கீகாரத்தையும் பெறுகிறார். எண்ணற்ற பல சிறப்புகளை வழங்கி இந்த முஸ்லிமை அல்லாஹ் சிறப்பிக்கிறான். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (2:277)

إِنَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ وَأَقَامُوا الصَّلاَةَ وَآتَوُا الزَّكَاةَ لَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلاَ خَوْفٌ عَلَيْهِمْ وَلاَ هُمْ يَحْزَنُونَ

"எவர்கள் நம்பிக்கை கொண்டு, நற்செயல்களைச் செய்து, தொழுகையைக் கடைப்பிடித்து, மார்க்க வரியையும் (ஜக்காத்து) கொடுத்து வருகின்றார்களோ அவர்களுக்குரிய கூலி அவர்களின் இறைவனிடம் அவர்களுக்கு உண்டு. அன்றி அவர்களுக்கு (மறுமையில்) எவ்வித பயமும் இல்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்"

காரணம் ஜகாத் கொடுப்பதன் மூலம் அகம் தூய்மையடைகிறது. அல்லாஹ் தஆலா கூறுகிறான்: (9:103)

خُذْ مِنْ أَمْوَالِهِمْ صَدَقَةً تُطَهِّرُهُمْ وَتُزَكِّيهِمْ بِهَا وَصَلِّ عَلَيْهِمْ إِنَّ صَلاَتَكَ سَكَنٌ لَهُمْ وَاللَّهُ سَمِيعٌ عَلِيمٌ

"(நபியே!) அவர்களுடைய பொருள்களிலிருந்து தானத்தை நீங்கள் எடுத்துக்கொண்டு அவர்களை (உள்ளும் புறமும்) பரிசுத்தமாக்கி வைத்து (பாக்கியவான்களாகும்படி)



www.sunnathwaljamath.com

அவர்களுக்காக (துஆ) பிரார்த்தனை செய்யுங்கள். உங்களுடைய (துஆ) பிரார்த்தனை நிச்சயமாக அவர்களுக்கு ஆறுதலளிக்கும். அல்லாஹ் செவியுறுபவனும் மிக அறிபவனாகவும் இருக்கின்றான்"

"இங்கு கடமையான தர்மம் அதாவது ஜகாத் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது" என்று இந்த வசனத்திற்கு இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகிறார்கள். ( /8) : تفسير القرطبي (244)

யா அல்லாஹ்! உன்னுடைய திருப்தியை தேடி அதனை பெறுபவர்களாக எங்களை ஆக்கியருள்வாயாக! ஜகாத் கொடுப்பதன் மூலம் எங்களுடைய அகத்தையும், செல்வங்களையும் நீ தூய்மையாக்குவாயாக!! எங்களுடைய பொருட்செல்வங்களிலும், குழந்தை செல்வங்களிலும் நீ நற்பாக்கியங்களை வழங்குவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! தொழுகையாளிகளே! அல்லாஹ்விற்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள். தொடர்ந்து அவனுக்கு கீழ்படிந்து நடங்கள். யார் ஜகாத்தை மிக சரிவர நிறைவேற்றி வருகிறாரோ அல்லாஹ் அவருடைய செல்வத்தில் அபிவிருத்தி செய்வான். ஜகாத் கொடுப்பதால் பயனாளிகள் மிகவும் அக மகிழ்ந்து வாழ்வில் ஏற்றம் பெற உதவியாக இருக்கிறது. பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (70:24-25)

وَالَّذِينَ فِي أَمْوَالِهِمْ حَقٌّ مَّعْلُومٌ* لِلسَّائِلِ وَالْمَحْرُومِ

"அவர்களுடைய பொருள்களில் (ஏழைகளுக்குக்) குறிப்பிட்ட பங்கு உண்டு. அதனைக் கேட்பவர்களுக்கும் (வெட்கத்தால்) கேட்காதவர் களுக்கும் (கொடுப்பார்கள்)"

அதாவது இந்த பொருளை பெறுவதால் பயனாளிகளுடைய அத்தியாவசிய தேவைகள் நிறைவேறுகின்றன. கேட்டுப் பெறுவதற்கு கூனி குறுகி போயிருப்பவர்கள் இதன் மூலம் பயன்பெற்று உள்ளம் பூரிப்படைகிறார்கள். ((227/8) : تفسير ابن كثير)

ஜகாத்தை சரிவர நிறைவேற்றி வந்தால் அதன் மூலம் ஒரு சமூகத்தில் அன்பும் அக்கறையும் பரவும். ஒருவர்மீது ஒருவருக்கு இரக்க குணமும், உதவும் மனப்பான்மையும், உண்மையான இணக்கமும் ஏற்படும். இதனால் பல்வேறு நற்பாக்கியங்கள் கிடைக்கும். இறையருள் இறங்கிக் கொண்டே இருக்கும். பின்வரும் வசனத்தை இறைவன் மெய்ப்பித்துக் கொண்டே இருக்கிறான்: (24:56)

وَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ وَأَطِيعُوا الرَّسُولَ لَعَلَّكُمْ تُرْحَمُونَ

"(நம்பிக்கையாளர்களே!) நீங்கள் தொழுகையைக் கடைப்பிடித்தொழுகி, ஜகாத்தும் கொடுத்து (அவனுடைய) தூதரை (முற்றிலும்) பின்பற்றி வாருங்கள். நீங்கள் (இறைவனுடைய) அருளை அடைவீர்கள்"

ஜகாத்தை சரிவர நிறைவேற்று ஒரு சமூக மக்களுக்கு அல்லாஹ் நிலையான அமைதியை உருவாக்கி தருகிறான். தன்னுடைய கிருபையை வாரி வழங்குகிறான். எங்கும் தன்



www.sunnathwaljamath.com

அருட்பார்வையை நிரப்பி வைத்திருக்கிறான். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (7:156)

وَرَحْمَتِي وَسِعَتْ كُلَّ شَيْءٍ فَسَأَكْتُبُهَا لِلَّذِينَ يَتَّقُونَ وَيُؤْتُونَ الزَّكَاةَ وَالَّذِينَ هُمْ بِآيَاتِنَا يُؤْمِنُونَ

"என்னுடைய அருட்கொடை அனைத்தையும் விட மிக விரிவானது. ஆகவே, எவர்கள் (எனக்குப்) பயந்து ஜகாத்தும் கொடுத்து வருகிறார்களோ அவர்களுக்கும், எவர்கள் நம்முடைய வசனங்களை நம்பிக்கை கொள்கிறார்களோ அவர்களுக்கும் (என்னுடைய அருளை) நான் முடிவு செய்வேன்"

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

"ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்"

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நாம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருக்க வேண்டும். வல்ல அல்லாஹ் நபி மீது ஸலவாத் சொல்லும் செயலை தன்னிடமிருந்தே தொடங்கி, அதில் மலக்குமார்களையும் சேர்த்து உண்மை முஃமின்களாகிய நம்மையும் சொல்லச்சொல்கிறான் : (33:56)

إِنَّ اللَّهَ وَمَلائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا

"இந்த நபியின் மீது அல்லாஹ் (ஸலவாத் ஓதி) அருள்புரிகிறான். மலக்குகளும் அவருக்காக (ஸலவாத்ஓதி) அருளைதேடுகிறார்கள். மூமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத் சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்"

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!,

மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்த்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.



www.sunnathwaljamath.com

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).